செ.வெ.எண். 83 நாள்: 31-08-2017

# பத்திரிக்கை செய்தி

பாரத பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP - Prime Minister Employment Generation Programme) மாவட்டத்தில் ஊரக மற்றும் நகர்புற பகுதிகளில் குறுந் தொழில்களை அமைத்து வேலை வாய்ப்பு உருவாக்கும் வகையில் திருநெல்வேலி மாவட்ட தொழில் மையம் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் ரூ.25 இலட்சம் திட்ட மதிப்பீடு வரையிலான உற்பத்தி தொழில்களும், ரூ.10 இலட்சம் வரையுள்ள சேவைத் தொழில்களும் கடன் பெறத் தகுதியுள்ளனவையாகும். திட்ட மதிப்பீடு ரூ.10 இலட்சத்திற்கு மேற்பட்ட உற்பத்தித் தொழில் மற்றும் திட்ட மதிப்பீடு ரூ.5 இலட்சத்திற்கு மேற்பட்ட சேவைத் தொழில் ஆரம்பிக்க குறைந்த பட்ச கல்வித் தகுதியாக எட்டாம் வகுப்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. திட்ட மதிப்பீட்டில் 90 முதல் 95 விழுக்காடு வரை வங்கி கடனாக வழங்கப்படும்.

பொதுப்பிரிவினர் 10 விழுக்காடும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் / இதர பிற்பட்டவகுப்பினர் / சிறுபான்மையினர் / பெண்கள் / முன்னாள் ராணுவத்தினர் / உடல் ஊனமுற்றோர் ஆகிய சிறப்புப் பிரிவினர் 5 விழுக்காடும் தங்கள் பங்குத் தொகையாக வங்கிகளில் செலுத்த வேண்டும். கிராமப்புறங்களில் தொழில் ஆரம்பிக்கும் பொதுப்பிரிவினருக்கு 25 விழுக்காடும் சிறப்புப் பிரிவினருக்கு 35 விழுக்காடும் மானியமாக வழங்கப்படும். நகர்ப்புறங்களில் தொழில் ஆரம்பிக்கும் பொதுப்பிரிவினருக்கு 15 விழுக்காடும் சிறப்புப் பிரிவினருக்கு 25 விழுக்காடும் மானியமாக வழங்கப்படும்.

இத்திட்டத்தில் சிறப்பம்சமாக வயது வரம்பு, வருமான வரம்பு எதுவும் நிர்ணயம் செய்யப்படவில்லை.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற இணையதளம் **www.kviconline.gov.in**, **www.pmegp.in** வாயிலாக மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.

இத்திட்டத்தில் விண்ணப்பிக்க தகுதியுடைய, ஆர்வமுள்ள தொழில் முனைவோர் மேற்கண்ட இணையதளம் மூலமாக விண்ணப்பித்து பயன்பெறுமாறு திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக் கொள்கிறார்.

பொது மேலாளர்,
மாவட்ட தொழில் மையம்,
திருநெல்வேலி.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருநெல்வேலி.

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
திருநெல்வேலி.